### 236 மாணவர்களையும், 92 ஆசிரியர்களையும் 6 நாடுகளுக்கு அழைத்துச் சென்ற கல்வி அமைச்சர்

# அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கு வாழ்த்து!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளத்தில் பதிவு!

சென்னை, அக்.22-

திராவிடமாடல் அரசின் முன்னெடுப்பாக 236 மாணவர்களையும், 92 ஆசிரியர்களையும் 6 நாடுகளுக்கு அழைத்துச் சென்றுள்ள பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழிக்கு வாழ்த்து என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.



அவரது பதிவு வருமாறு:-

**திரைகடல் ஓடியும் திரவியம் தேடு! கடல் தாண்டி நாம் பெறும் பெருஞ்செல்வம் கல்வியைத் தவிர வேறொன்று உண்டா? அத்தகைய கல்வியின் சிறப்பை நமது தமிழ்நாட்டின் மாணவச் செல்வங்களும் ஆசிரியப் பெருமக்களும் உணர்ந்து கல்வி வேட்கை கொள்ள மேற்கொள்ளும் நமது திராவிட மாடல் அரசின் சிறப்பான முன்னெடுப்பு.**

**இந்தப் பதிவு குறித்து நான் தம்பி அன்பில் மகேஸ் அவர்களிடம் பேசிய போது, இதுவரையில் எத்தனை மாணவர்களை வெளிநாடுகளுக்கு அழைத்துச் சென்றுள்ளோம் எனக் கேட்டேன். ஆறு நாடுகளுக்கு 236 மாணவர்களை அழைத்துச் சென்றுள்ளதாகவும் இந்தப் பயணத்துடன் 92 ஆசிரியர்களும் இந்த வாய்ப்பினைப் பெற்றதாகவும் கூறினார்.**

**இதைக் கேட்டதும் மகிழ்ச்சியால் என் நெஞ்சம் நிறைந்தது! இந்த முன்னெடுப்புகளைச் செய்துவரும் அன்பில் மகேஸ் அவர்களுக்கும், அவருக்குத் துணை நிற்கும் துறை அதிகாரிகளுக்கும் வாழ்த்துகள்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையேற்று, கழக இளைஞரணிச் செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் கரத்தை வலுப்படுத்த புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் வடகாடு பகுதியைச் சேர்ந்த ஐம்பதுக்கும் மேற்பட்டவர்கள் பல்வேறு கட்சிகளில் இருந்து விலகி பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படை உறுப்பினர்களாக தங்களை இணைத்துக் கொண்டனர்.



திருப்பூர் தெற்கு மாவட்டம், குடிமங்கலம் கிழக்கு ஒன்றியம் வேலப்பநாயக்கனூர் பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு மாபெரும் மோட்டார் சைக்கிள் போட்டியை கழக கொடியேற்றி தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் துவக்கி வைத்து வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ் வழங்கினர். இதில் மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல பத்மநாபன், ஒன்றியச் செயலாளர் ச.ராஜமாணிக்கம் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர்.பி.பழனியப்பன் அறிவிப்பு!

தருமபுரி, அக். 22 -

தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம் நாளை (23.10.2024 - புதன்கிழமை) மதியம் 2.00 மணியளவில் காரிமங்கலம் மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர்.கே.மனோகரன், தலைமையில் நடைபெற உள்ளது.



அதுசமயம் நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், அணிகளின் அமைப்பா ளர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47 வது பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடுவது குறித்து.

மாவட்ட கழகத்திற்கு வங்கி கணக்கு துவங்குதல் குறித்து.

கழக ஆக்கப்பணிகள் குறித்து.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



ஈரோடு வடக்கு மாவட்டம் தொகுதி பார்வையாளர்கள் கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் தலைமையில் மருத்துவ அணி துணை தலைவர் செந்தில்நாதன் முன்னிலையில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் சட்டமன்ற தொகுதிகளின் பார்வையாளர்கள் பவானி கழக நெசவாளர் அணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம், அந்தியூர் தொழிலாளர் அணி துணை செயலாளர் சி.காசி, கோபி சட்டத்துறை இணை செயலாளர் வழக்கறிஞர் கே.எம்.தண்டபாணி, பவானிசாகர் ஆதிதிராவிட நலக் குழு இணை செயலாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி மற்றும் ஈரோடு வடக்கு மாவட்டத்தை சேர்ந்த மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### செஞ்சி ஒன்றியம் கணக்கன் குப்பம் ஊராட்சியில்

# ரூ.13.16லட்சம் மதிப்பீட்டில் புதிய ரேஷன் கடை!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்!

செஞ்சி அக். 22–

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி ஒன்றியம் கணக்கன் குப்பம் ஊராட்சியில்புதிய ரேஷன் கடை கட்டி கொடுக்க வேண்டுமெனபொதுமக்கள் அரசுக்கு கோரிக்கை வைத்ததையடுத்துசெஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 13.16லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய ரேஷன் கடை கட்டப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற தலைவர் சுலோச்சனா ஜெயபால் முன்னிலை வகித்தார். கணக்கன்குப்பம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர் கார்த்திகேயன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு புதிதாக கட்டப்பட்ட ரேஷன் கடையை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கு ரேஷன் பொருட்களை வழங்கி சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் செஞ்சி ஒன்றிய துணைச் சேர்மன் ஜெயபாலன், செஞ்சிமத்திய ஒன்றிய செயலாளர் விஜயராகவன், மேற்கு ஒன்றிய செயலாளர் பச்சையப்பன்,மாவட்ட கவுன்சிலர்கள் அரங்க ஏழுமலை, அகிலா பார்த்திபன், ஒன்றிய கவுன்சிலர்கள் கேமல் ,சத்யா கார்த்திகேயன்,முன்னாள் கவுன்சிலர் தங்கதுரை, ஊராட்சி மன்ற தலைவர்கள் மகேஸ்வரி பொற்செழியன், தாட்சாயினி கார்த்திகேயன், ஒன்றிய நிர்வாகிகள் வாசு, செல்வமணி,அய்யாதுரை,நிர்வாகிகள் ரமேஷ், கணேசன் ,சுரேஷ், கோபால், மகளிர் அணி கலா, உள்ளிட்டோர்கலந்து கொண்டனர்.விற்பனையாளர் பரசுராமன் நன்றி கூறினார்.



வருகிற 22 ஆம் தேதி நாமக்கல்லில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை திறப்பு விழா, நாமக்கல் மாநகராட்சி டாக்டர் கலைஞர் நூற்றாண்டு புதிய பேருந்து நிலையம் திறப்பு விழா மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை தரும் கழகத் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்க உள்ள இடங்களை நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச. உமா ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர் இந்நிகழ்ச்சியில் நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.ராமலிங்கம், நாமக்கல் காவல் கண்காணிப்பாளர் ராஜேஷ்கண்ணா, மாநகராட்சி ஆணையர் மகேஸ்வரி, நாமக்கல் மாநகராட்சி மேயர் து.கலாநிதி மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### நாமக்கல்லில்

# 15,000 க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை முதல்வர் வழங்குகிறார்!

## மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. தகவல்!

நாமக்கல், அக். 22 -

நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம் பிள்ளையின் 136வது பிறந்த நாள் விழா, நாமக்கல்லில் உள்ள அவரது நினைவு இல்லத்தில், அரசு சார்பில், சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், நாமக்கல் எம்.எல்.ஏ பெ.ராமலிங்கம், மாவட்ட ஆட்சியர் ச. உமா, கவிஞரின் உறவினர்கள் உள்ளிட்டோர் கவிஞரின் மார்பளவு சிலைக்கு மலர்கள் தூவியும் மாலை அணிவித்தும் மரியாதை செலுத்தினர்.

பின்னர் நாமக்கல் கவிஞர் இல்லத்தில் செய்தியாளர்களிடம் பேசிய கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் எம்.பி, சுதந்திரப் போராட்டத்திற்கு பங்காற்றிய நாமக்கல் கவிஞருக்கு, தமிழ்நாடு அரசின் சார்பில் ஆண்டுதோறும் அவரது இல்லத்தில் பிறந்தநாள் விழா சிறப்பாக கொண்டாடப்படு கிறது.

இன்று (22.10.2024 - செவ்வாய்க்கிழமை), தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நாமக்கல் மாவட்டத்திற்கு வருகை தந்து புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி வைத்து, முடிவுற்றப் பணிகளை திறந்து வைத்து 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்க உள்ளார்.



முன்னதாக, அன்று நண்பகல் நாமக்கல் பரமத்தி சாலையில் புதிதாக அமைக்கப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைக்க உள்ளார். அதன் பின்னர் பிற்பகல் 3 மணிக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் பங்கேற்க உள்ளார். இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாகம் முழு வீச்சில் மேற்கொண்டுள்ளது என்றும், தி.மு.க. சார்பில் தமிழ்நாடு முதலமைச்சருக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.



கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின், பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் வடக்கு மாவட்டக் கழகத்தின் சார்பில், மாமன்ற உறுப்பினர் கல்விக் குழுத் தலைவர் பெ.திவாகரன் ஏற்பாட்டில் நடைபெறும் 2ஆம் ஆண்டு மாபெரும் கிரிக்கெட் போட்டியை சிக்கண்ணா அரசு கலைக் கல்லூரி மைதானத்தில் மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். இதில் மாநகரச் செயலாளர்கள் டி.கே.டி.மு.நாகராசன் திருப்பூர் தெற்கு, மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் திருப்பூர் வடக்கு, உள்பட மாவட்ட, மாநகர நிர்வாகிகள், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.



கழக தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான இந்தியா கூட்டணி சார்பில் திருச்சி நாடாளுமன்ற தொகுதியில் வெற்றி பெற்ற துரை வைகோ எம்.பி. வாக்காளர் பெருமக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் புதுக்கோட்டை தெற்கு ஒன்றியத்திற்குட்பட்ட ஊராட்சிகளில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில் புதுக்கோட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் வை.முத்துராஜா, ம.தி.மு.க. மாவட்டச் செயலாளர் எஸ்.கலியமூர்த்தி ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வுகளில் புதுக்கோட்டை தெற்கு ஒன்றிய செயலாளர் மு.க.ராமகிருஷ்ணன் உள்ளிட்ட ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள், வாக்களித்த பொதுமக்கள் பெருந்திரளாக பங்கேற்று சிறப்பித்தனர்.